


தெல்லிப்பழை - அம்பனை பன்னாலை

வாசரும்

இளைப்பாறிய சுகாதாரத் திணைக்கள பிரதம

லிகிதருமான

# திரு. C. A. சண்முகநாதன் அவர்கள்

சிவபதமெய்தியமை குறித்து

வெளியிடப்பட்ட

# நினைவு மலர்

# 05-03-1993

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றம்

1910 - 12 - 13



மறைவு

1993 - 02 - 03

# திரு. அருணாசலம் சண்முகநாதன் அவர்கள்

## திதி வெண்பா

ஆங்கிரச ஆண்டு அழகுமதி தைப் பூர்வந்
தாங்கு திதி ஏகாதசி நாளே – தேங்குபுகழ்
சீர் அருணாசலமைந்தன் சேர் சண்முகநாதன்
பார் நீத்த நாளென்றே பாடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



திருச்சிற்றம்பலம்

எல்லா உலகமும் ஆனாய் நீயே
ஏகம்ப மேவி இருந்தாய் நீயே
நல்லாரை நன்மை அறிவாய் நீயே
ஞானச் சுடர்விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைகள் அறுப்பாய் நீயே
புகழ்ச்சே வடிஎன்மேல் வைதாய் நீயே
செல்வாய செல்வம் தருவாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதி.

திருச்சிற்றம்பலம்

— அப்பர் சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# சமர்ப்பணம்

எமது அன்புத் தந்தையின் நினைவு மலரை
அவர்களின் பாதமலர்களில் அன்புடன்
சூட்டிச் சமர்ப்பிக்கின்றோம்.

திருமதி. க. அருணாதேவி
திருமதி. கு. தர்மபூபதி
ச. சிறிஸ்கந்தராசா
ச. விஜயராணி
ச. சிறி பவானந்தராசா
ச. சிறி பாஸ்கரராசா

*" அருணோதயம் "*
*அம்பனை,*
தெல்லிப்பழை.
*1993-03-05.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# அமரர் அருணாசலம் சண்முகநாதன்

## அவர்களின் வாழ்க்கைச் சீர்ப் பரావல்

தேவாரப் பாடல்கள் பெற்ற இரு ஈச்சுரங்களைக் கண்களாக உடையதும் ஒரே முகூர்த்தத்தில் ஸ்ரீ ரேணுக சிவாசாரியரால் மூன்று கோடி லிங்கப் பிரதிட்சை செய்யப்பட்டதும் திரு மூலரால் சிவ பூமி என போற்றப்பட்டதும் ஆகியது எம் ஈழ வழ நன்னாடாகும். இதன் சிரமெனத் துலங்கும் யாழ்ப்பாண குடாநாட்டின் தென் பாங்கர் அமைந்தது தென்மராட்சி ஆங்கே ஜம்பு மரங்கள் அமோகமாயுள்ள தால் பெயர் பெற்ற நாவற்குழியூரிலே தொன்மை வாய்ந்த உயர் சைவ வேளாண்குடி பல அவற்றில் ஒன்றாகிய கணபதிப்பிள்ளை அருணாசலமும் நமசிவாயம் தையல்நாயகியும் சேர்ந்த குடும்பத்தவர் செய் தவத்தால் குடும்பத்தில் இளைய மகனாக 13-12-1910 ஆண்டு அவதரித்தவரே அமரரான சண்முகநாதன் அவர்கள்.

நங்கை நல்லாள் செல்லம்மாவின் கணவன் நமசிவாயமும் கணபதிப்பிள்ளையும் ஆகிய இரு சகோதரர்களையும் பொன்னுத்துரை மனைவி இலங்கைநாயகி எனும் ஒரு சோதரியுமாகிய உடன் பிறப்பு களாகக்கொண்ட இவர் இளமையில் கைதடி சுத்தோலிக்க கிறிஸ்தவ பாடசாலையில் ஆரம்பக் கல்வியைக் கற்றார். பின் சுண்டுக்குளி சம்பத்திரிசியார் கல்லூரியில் உயர் கல்வி கற்று இலங்கை அரசாங்க சேவையிற் சேர்ந்து சுகாதாரத் திணைக்களத்தில் சுமார் நாற்பது ஆண்டுகள் பிரதம லிகிதராய் தொழில் புரிந்தார். பதுளை, கோப்பாய் தெல்லிப்பழை, சிலாபம், அநுராதபுரம், மன்னார், கொழும்பு ஆகிய இடங்களில் சேவையாற்றினார். கடமையிற் கண்ணாயிருந்து இறை தொண்டுபோல கடமையாற்றியமையினாலும் தேர்ச்சி மிக்க ஆங்கில அறிவினாலும் சக அதிகாரிகளினால் பெரிதும் விரும்பப்பட்டார்.

விவாகப் பருவத்தில் 1948-ம் ஆண்டு தெல்லியூர் பன்னாலை கிராமத்திலே பிரபல்யமான உயர் சைவ வேளாண் மரபைச் சேர்ந்த கந்தையா மூத்ததங்கம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரி சரஸ்வதியைத் திருமணம் புரிந்தார். காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், விநாயக மூர்த்தி, விஜயரட்ணம் ஆகியோரை மைத்துனர்களாகவும் மயில் வாகனம் மனையாள் மகேஸ்வரி, கனகசபை துணைவி பரமேஸ்வரி, தர்மலிங்கம் இல்லாள் அன்னலட்சுமி, விமலநாதன் நங்கை மனோன் மணி ஆகியோரை மைத்துனிகளாயும் அடையப்பெற்றார்.

இல்லறத்தை நல்லறமாக ஆற்றியமையின் அவ்வில்லறப் பயனாய் சிவபதமடைந்த கனகசபாபதி துணைவி அருணாதேவி, குகதாசன் இல்லாள் தர்மபூபதி, செல்வி விஜயராணி ஆகிய முச்சத்திகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற மூவர் புத்திரிகளையும் உறுதுணை ரோகிணி பார்த்தா ஸ்ரீஸ்கந்தராசா, சிறி பவானந்தராசா, சிறி பாஸ்கரராசா ஆகிய மும்மூர்த்திகள் போன்ற மூன்று சிறி ராசாக்களையும் பெற்று வளர்த்து நற்கல்வியூட்டி நல்வழிப்படுத்தினர்.

பிள்ளைகளின் பிள்ளைகளாகச் செல்வக் குழந்தைகளாக சிவசாந்தி, செல்வஸ்கந்தன், துவாரகன், கோகுலன், வேதசாருணி, உமாரமணி, உமாரமணன் ஆகிய சிவமூர்த்தங்கள் போன்ற ஏழு பேரப்பிள்ளைகளின் மழலை மொழி கேட்டு மனம் மகிழ்ந்தார்.

பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகரில் பற்று மிக்க இவர் சென்ற காலங்களில் ஆங்கு மகோற்சவ தேர்த்திருவிழா மிகச் சிறப்பாக நடாத்த வேண்டும் என்ற அவாவுடன் செயற்பட்டு வந்தார். அத்துடன் பிறந்தகத்து வைரவர் கோவிலும் மேலும் பக்தி நிரம்பிய வராக இருந்தார். உற்றார். உறவினர், ஊரவர் யாவருமே பப்பா எனவே அன்புடன் அழைத்தமை அவர்களிடத்து இவர் கொண்ட அன்புக்குச் சான்ருகும்

நோயுற்ற வேளை சொந்த வசிப்பிடத்தைவிட்டு சிகிச்சைக்காக கொழும்பு வந்து பின்பு வவுனியாவில் சிகிச்சை பெற்றவேளையில் உயிர் துறந்தார்.

உடம்பு முகந்து கொண்ட ஊழ் கழிந்தும் ஆங்கீரச ஆண்டு தைத் திங்கள் **21** ம் நாள் (**3-2-1993**) புதன்கிழமை பூர்வ பக்கத்து ஏகாதசித் திதியும் மிருக சீரிட நட்சத்திரமும் கூடிய புண்ணிய தினத்தில் பூந்தேறிப் பொன்னுலகுபுக்குச் சிவபதஞ் சேர்ந்தார் அன்னரது ஆன்மா சாந்தியடைக!

**"நெருந லுளனொருவனின்றில்லை என்னும்**
**பெருமையுடைத்திவ் வுலகு"**

என்று முன்மொழிந்த திருக்குறளையே பின்பும் மொழிந்தது அதன் பொருளை நினைவு கூர்ந்து தேற்றமடைவோமாக.

அவனியில் தோன்றிய ஆன்மாக்கள் மறைவது உலக இயற்கையே என மனந்தேறி அவரது ஆன்மசாந்திக்காக ஆண்டவனைப் பிரார்த்திப்போமாக!!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# APPRECIATION

*921 Midland Ave,*
*APT. 204, Scarborough.*
*Ontario, Canada.*

*I had the great privilege of becoming a friend of Mr. A. Shanmuganathan of Pannalai during the early nineteen fifties when I was working in the Anuradhapura district. His jovial, candid. outspoken, cordial and friendly ways always remain vivid in my mind's eye. I was always mindful about him and I never failed to make inquires about him and his family from whatever suitable source I came across. When I first heard about his passing away I felt as if part of my Iimb had been snatched away suddenly. I was hoping against hope that one day I would be able to go and meet him in Sri Lanka when the ethnic trouble settled somewhat.*

*I pray to the almighty that his amiable, kind and pure soul may rest in peace in Heaven.*

**Dr. V. S. Ahamparam**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# திருமுறைத் திரட்டு

திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

## திருவாசகம்

பானினைந் தூட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை யுருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா வானந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனக் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோ ருணர்வே
தெளிவளர் பளிங்கின் றிரண்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பல மாடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப் பொருள் சோதித்
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையும் சிலதேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரண்மேரு
விடங்கண் விடைப்பாகன்
பல்லாண் டெனும்பதங் கடந்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றும்
திரிந்துசாத் துவிகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடும்ஆ னந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வில்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தம தானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# ஔவையார் அருளிச் செய்த

# விநாயகரகவல்

திருச்சிற்றம்பலம்

சீதக் களபச் செந்தாமரைப் பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்ப
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
ஐந்து கரமு அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதன் ஈன்ற கற்பகக் களிறே
முப்பழ நுகரும் மூஷிக வாகன
இப்பொழு தென்னை யாட்கொள்ள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்க மறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென்னுளந்தனிற் புகுந்து
குருவடிவாகி குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளி
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா வுவதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை யடக்குமு பாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளி
கருவிக ளொடுக்குங் கருத்தினை யறிவித்து
இருவினை தன்னை யறுத்திருள் கடிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனமொரு நான்கும் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயிலொரு மந்திரத்தால்
ஐம்புலக் கதவை யடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்குக நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையி னெழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுய காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணில்
நான்றெழு பாம்பினாவி லுணர்த்தி
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட வுரைத்து
மூலாதகரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழும்பும் கருத்தறிவித்தே
அமுத நிலையு மாதித்த னியக்கமுங்
குமுத சகாயன் குணத்தயுங் கூறி
இடைச்சக் கரத்தி னுறுப்பையுங் காட்டிச்
சண்முக தூனமுஞ் சதுர்முக சூக்கமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்
புரியட்டகாயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்தி
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை யறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைத்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயந்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி யிரண்டுக் கொன்றிட மென்ன
அருள்தரு மானந்தத் தழுத்தியென் செவியில்
எல்லையில்லா ஆனந்த மளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டி
சத்தத்தினுள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தினுள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடு மெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக்கரத்தின் அரும்பொருடன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறிவித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

பாசமிக்க குடும்பத் தலைவனாய் நல்வழி காட்டியாய் அமைந்து எம் இன்பத்திலும் துன்பத்திலும் பங்கு கொண்டு இனிய வாழ்விற்கு உறுதுணையாய் இருந்தவர் இயற்கை எய்திய வேளையில் உடன் வந்து பல்வகை உதவிகள் புரிந்த உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் இறுதிக் கிரியைகளின்போது சமூகம் தந்து எமது துக்கத்திற் பங்கு பற்றி அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் அனுதாபத் தந்திகள், கடிதங்கள் மூலம் எம்மைத் தேற்றியவர்களுக்கும் உளமார்ந்த நன்றியறிதலை பணிவன்புடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

இங்ஙனம்,

**திருமதி. சரஸ்வதி சண்முகநாதன்**
**மற்றும்**
**பிள்ளைகள், மருமக்கள்**

வவுனியா.
*05-03-1993*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org